ADVICE AND SUPPORT FOR BENEFITS
சமூக நல வருமானங்கள் பெறுபவர்கள் உரிய வருமானத்தைப் பெறவும், விதிவிலக்குகள் பற்றி அறியவும் எம்மை அழையுங்கள்
CALL US NOW
079 0843 7921


# பார்வை

INSEIN newsletter-அறிவியல் வழிகாட்டி

FREE ISSUE மாதம் இரு வெளியீடு Published twice a month

Issue 07/2013 Friday, April 5th, 2013


Jaffna's Fast Food & Cool Bar
TEL : 020 3514 6281
மண்சுவைக்கு மங்காத உணவகம். தரமான சுவையான உடன் உணவுகள் உங்கள் தேவைக்கேற்ப தயாரித்து வழங்கப்படும் . .
Hayes Minimart,
Unit 1, 610 Uxbridge Road,
Hayes, Middlesex, UB4 0RY

Parvai, Insein Newsletter, 610, Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
Tel : (020) 8561 6324 Mob : 078 0843 7921 Fax: (020) 8561 6324 Website: www.insein.co.uk Email: info@insein.co.uk

**மகாத்மா காந்தி – ஆசிரியர் P.S.R**



இந்தநாடு- காந்திநாடு- காண்பது தான் நமது தலை-முறைக்கு உள்ளவேலை. இதைச்சாதிக்க அனைவரும் ஒன்றுபட நமது... தொடரும் 2ம் பக்கம்

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினருக்கு –இ.ஜெகதீஸ்வரன்**



இராசரத்தினம் ஜெகதீஸ்வரன் வயது 34 திருக்-கேதீஸ்வரம் எனும் முகவரியைச் சொந்த இடமாகக் கொண்ட நான் முன்னாள்.... தொடரும் 3ம் பக்கம்

**இலங்கையில் இந்தியாவின் நேரடித் தலையீடு- Dr. மோகன்**



1989-1994 வரையிலான காலப் பகுதியில் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு ஆர்.பிரேமதாஸா ஜனாதி-பதியா-கப் பதவியேற்றிருந்தார்..... தொடரும் 4ம் பக்கம்

**வீட்டு வாடகை நிலுவை முற்றும் வீட்டை திருப்பி பெறல் - சட்டத்தரணி திரு. ஜெயராஜன்**




நான் ஒரு வாடகைக்கு வீட்டில் வசித்து வருகிறேன் ஆனால் வீட்டு உரிமையாளர்.... தொடரும் 5ம் பக்கம்

**விடுதலையின் முதிர்ச்சி பெற்ற பாதை - தி.வன்னியன்**



வட்டுக் கோட்டைப் பிரகடணம் 1977இல் இடம் பெற்ற தேர்தலின் மூலம் பெற்ற வெற்றியை மக்கள் ஆணையாகக் கொண்டு முதற் கட்டமாக.... தொடரும் 6ம் பக்கம்

**ஆன்மீகம் : ஆலயம் – சந்துரு ஐயா**



யுகங்கள் நான்கு! கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன கிருதயுகத்தில் ஞானத்தினால் முக்தி, திரேதாயுகத்தில் தானத்தினால்.... தொடரும் 10ம் பக்கம்

**அன்பான வாசகர்களுக்கு இன்றைய எம்நிலை**

அணிசேர்ந்து விடுதலையை முன்னெடுங்கள் என்பது எனது அன்பான வேண்டுகள்

தமிழக மாணவர்களுக்கு ஆதரவாக லண்டனில் இளையோர்களின் கவனவீருப்பு போராட்டம் முக்கியமான ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து 18/03/2013 காலை 11.00 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வுண்ணாவிரதத்தை மூன்று இளையோர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர், லண்டன் மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்தின் முன்றலில் மாற்று இன மக்களின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் முன்னெடுத்துள்ளார்கள். இரவு பகலாக முன்னெடுக்கப்பட்ட எம்மாணவர்களின் கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் தமது போராட்டத்திற்கும், தமிழக மாணவர் சமூகம் முன்னெடுக்கும் போராட்டத்திற்கும் வலுச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.



எந்த ஒரு அமைப்பின் பின் புலமும் இல்லாமல் இளைய சமுகம் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கவனயீரப்பு உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்த எம்மவர்கள் சர்வதேச நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை, மற்றும் இந்திய அரசிடமும் முன்வைத்துள்ள 5 கோரிக்கைகள் வருமாறு:

தொடரும் 4ம் பக்கம்

*அன்பும் அறிவும் பண்பும் பணிவும் உறுதியும் உடையவர்கள்*
*வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வார்கள்*

தமிழ் ஓலைகள்
TAMIL PAGES
தமிழர்களுக்கோர்
தரமான இலவச
சமூக, வர்த்தக
தகவல் ஏடு
0771 800 3838 | 0798 642 9848
editor@tamilpages.com
www.tamilpages.com

First Technology Services (UK) Ltd
www.firsttechnologyservices.co.uk
FTS
COMPUTER SUPPORT
Upgrades & Installations
Home & Office Network Setup
Broadband Troubleshooting
System Backup & Restore
Virus & Spyware Removal
Satisfaction No Fix No Fee* Guaranteed
Dharshan - 078 0332 0400
Amit - 079 7575 8858
* Terms & Conditions apply. Office hours : 09:00am to 06:00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி



“அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும்.
மக்களாட்சி மலர வேண்டும்.
இந்து- முஸ்லிம் ஒற்றுமை வேண்டும்.
தொழில்கள் பெருக வேண்டும்.
கல்வி பரவ வேண்டும்.
ஜாதி பேதம் ஒழிய வேண்டும்.
தீண்டாமை போக வேண்டும்.
கிராமம் சீர்பட வேண்டும்.
வறுமை போக வேண்டும்.
சுரண்டல் முறை ஒழிய வேண்டும்.
ஏழை ஈடேற வேண்டும்.
ஏழை உரிமை பெறவேண்டும்.
ஜாதிபேதம் ஒழிய வேண்டும்.
ஒற்றுமை மலர வேண்டும்.”

இந்தநாடு- காந்திநாடு- காண்பது தான் நமது தலைமுறைக்கு உள்ளவேலை. இதைச்சாதிக்க அனைவரும் ஒன்றுபட நமது தலைவர்களெல்லாம் கூடிப்பேசி அனைவரின் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி இந்த அரும்பணியை வெற்றிகரமாக முடிக்கவேண்டும். நாடெங்கும்,நகரெங்கும் இலட்சக்கணக்கிலே கூடினர் மக்கள்- அவர்கள் மறைந்த உத்தமருக்குத் தமது கண்ணீரை அர்ப்பணித்தனர்.அவர் காட்டிய வழிச் சென்று தீட்டிய சித்திரத்தைக் காண இனிப் புதியதோர் ஆர்வத்துடன் அனைவரும் ஒன்றுபட்டுப் பணிபுரிய மக்களுக்கு நேர் வழி காட்டுவதும் ஒற்றுமைக்கான திட்டம் தீட்டுவதும் தலைவர்கள் கடமை.

### அவர் வாழ்க்கையில் ஓர் சம்பவம்

1893-வது ஆண்டில் தென்னாபிரிக்காவில் ஒரு வழக்குக்காகச் சென்றிருந்தார். தலைப்பாகையுடன் கோர்ட்டுக்குச் சென்றிருந்ததைக் கண்ட நீதிபதி தலைப்பாகையை அகற்றும்படி உரைத்தார். காந்தியடிகள் அங்ஙனம் செய்ய மறுத்துக் கோர்ட்டை விட்டு வெளியேறினார். நீதிபதியின் செய்கையைக் கண்டித்துப் பத்திரிகைகளுக்கு எழுதினார். இன்னொரு சமயம் பிரிடோரியா என்னம் இடத்துக்கு முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தார். நிறத்திமிர் கொண்ட ஒரு வெள்ளையன், ஒரு போலிஸ் கான்ஸ்டேபிளின் உதவியைக் கொண்டு அவரை முதல் வகுப்ப வண்டியினின்றும் கீழே இறக்கி விட்டான். இத்தகைய கொடுமைகளே காந்தியடிகளுக்கு வெள்ளயரின் நிறத்திமிரை ஒழித்துக்கட்ட உறுதி கொள்ளும்படி செய்தது. கடைசியில் வெள்ளையரின் ஆதிக்கமே இந்நாட்டில் இல்லாது ஒழிந்ததற்கு உத்தமரின் ஓயாத உழைப்பே காரணமாயிற்று.

இந்தியாவின் விடுதலைக்கு வித்திட்டவர் மகாத்மா காந்தி என வரலாறு கூறுகிறது. எனவே நாங்களும் அவரின் விடுதலை சார்ந்த முன்னெடுப்புக்களையும் பங்களிப்பையும் ஓரளவு தெரிந்துகொள்வது அவசியம். வழக்கமான விசாரிப்பு (Conventional Narrative) இந்தியாவின் வரலாறு மோகென்யோ, டாவோ, கவப்பா, லோதல் (Mohenjo, Davo, Havappa, Lothal) ஆகிய நகரங்களுக்கு ஆரியரின் வரவைத்தொடர்ந்து இந்து வெளி நாகரீகம் (Indus Valley Civilization) ஆரம்பமானது. வேதகாலத்திற்கு முந்திய (Pre-Vedic) வேதகாலப்பகுதி (Vedic Period) ஆகிய இரண்டு காலப்பகுதிகளும் இதற்காக வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்து சமயம் முதல்முதலாக உருவாகிய வேதகாலப்பகுதியில் (Vedic Period) இந்து வெளி நாகரீகத்தில் அடிப்படைக் கோட்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலத்தில் கி.பி 4ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பெரிய நிலப்பகுதி அவரின் ஆட்சியில் இருந்தது. புத்தமதத்திற்கு அவரும் இந்துக்களை மதமாற்றம் செய்ததுடன் ஆசியாவின் ஏனைய பகுதிகளுக்கும் புத்தமத்தை முதலில் பரப்பினார். அக்காலகட்டத்தில் முறையாஸ் (Mauryas) என்பவரால் இந்து சமயம் அடிப்படையாக (Fundamentally) ஓர் பரிமான வடிவத்தைப் பெற்றது என்றும் அன்றைய நடைமுறை இன்று வரை தொடரப்படுகிறது என வரலாறு குறிப்பட்டுக்காட்டுகிறது. அத்துடன் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் விஜயனும் அவரது 700 தோழர்களும் விஜயனுடைய தந்தையாரல் இலங்கைக்குத் துரத்தப்பட்டார்கள் அவர்களின் வழித்தோற்றம் தான் சிங்கள இனம் என வரலாற்றுக் குறிப்புக்களும், இவ்வகையான அனைத்துச் சரித்திரங்களும் 1960-1970ஆம் ஆண்டுகளில் இலங்கையிலுள்ள கல்வி பாடத்திட்டங்களுக்கமைய சரித்திரம் (History) புவியியல் (Grography) குடியியல் (Civis) எனும் பாடங்களைப் படித்தவர்களுக்கு அவை அனைத்தும் ஓரளவு தெரியும். இவற்றை மறைப்பதற்காக 1974இல் புதிய பாடத்திட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. யாழ்நூலகத்தை எரித்து எஞ்சியிருந்த சான்றுகளையும் இல்லாமல் செய்தார்கள். இஸ்லாமிய மதம் 8ஆம் நூற்றாண்டில் இந்தியாவினுள் குடிபுகுந்தது. அது 11ஆம் நூற்றாண்டில் ஓர் பாரிய அரசியல்ச் சக்தியாக் (Political Force) வேரூன்றி உறுதியாகிற்று. அது பெரிய அளவில் அரசியல் ஒற்றுமையை "முகால் சாம்ராச்சயம் (Mughal Empire) இந்தியாவில் நிறுவியது. இந்தியா ஐரோப்பியரின் காலணித்துவ நாடு ஆக முன்பு குறிப்பாகவும் பொதுவாகவும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய வரலாறு ஆகும்.

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியரின் வருகைக்குப் பின்பு 18ஆம் நூற்றாண்டில் முகால் சாம்ராச்சியம் தாறுமாறக (Paving The Way of Regional States) அழிந்துபோனது (Desintegrate). புரட்சியில் Rebellion 1857-1858இல் இந்தியாவின் பெருமதிப்பை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு மக்கள் கோசமிட்டார்கள். அவை முறியடிக்கப்பட்டு இந்தியா விக்ரோரியா மகாராணி (Victoria Empress) என்ற அடிப்படையில் ஒன்றுபட்டது. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1919-1920) மகாத்மா காந்தி (Mohandas Karamchand Gandhi) பொதுவாக ஏற்கப்பட்ட தலைவராகத் (Virutually Undisputed leader) தோன்றினார் (Emerged). அது பிரபல்யமானதுடன் வல்லமை மிக்க கட்டிடம் போல் (Formidable Architat) ஆகியது. அந்த வெற்றிகரமான புரட்சிகளுக்குரிய பிரச்சாரம் (Campeign) 1947இல் பிரித்தானியாவிடமிருந்து இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க அணுகிய பாதையானது (Effect of Driving). ஒரே நாடாக இருந்த இந்தியா பின்னர் இந்தியா பாகிஸ்தான் பங்களாதேஸ் ஆக தனித்தனியே பிரிக்கப்பட்டு மூன்று நாடுகளாக தற்போது உள்ளன. சுதந்திரத்தின் பின்பு இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக யவர்லால் நேரு (Jawarlal Neru) 1947இல் பதவி ஏற்று 1964இல் அவர் இறக்கும் வரை பதவி வகித்தார். அதைத் தொடர்ந்து இந்திரா காந்தி அம்மையார் அப்பிரதம மந்திரிப் பதவியை வகித்தார்.

ஆகஸ்டு 9, 1942இல் காந்தியும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் பொம்பாயில் (Bombay) வைத்துக் கைது செய்யப்பட்டார்கள். பூனே (Pune) என்னும் இடத்திலுள்ள அகு கான் இடம் (Agu Kahn Place)இல் இரண்டு வருடங்கள் பிரித்தானியரால் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். காந்தி பலவித இன்னல்களுடன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அவர் சிறையில் இருந்த காலத்தில் 50 வயதான அவரடைய செயலாளர் இருதய நோயினால் இறந்த ஆறு நாட்களின் பின்பு காந்தியின் மனைவி கஸ்தூர்பா (Kashurba)வும் இறந்தார்.

ஆக்கம் : ஆசிரியர் P.S.R

HOLIDAY TRIPS IN UK & EUROPE
SPECIALLY WALES TEMPLE & LOUDS TEMPLE AND OTHER VARIOUS HOLIDAY PLACES

FOR FURTHER DETAILS CONTACT
BALAN : 075 0777 9687
RAVEE : 079 0843 7921
HAYES MINI MART,
610, UXBRIDGE ROAD,
HAYES, UB4 ORY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினருக்கு..

திரு.இ.ஜெகதீஸ்வரன்
திருக்கேதீஸ்வரம்
மன்னார்
30.01.2013

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினருக்கு, உதவி கோரல் தொடர்பாக,

இராசரத்தினம் ஜெகதீஸ்வரன் வயது 34 திருக்கேதீஸ்வரம் எனும் முகவரியைச் சொந்த இடமாகக் கொண்ட நான் முன்னாள் போராளி. முன்னர் பல விழுப்புண்களை தாங்கிய நான் மீண்டும் 2009ஆம் ஆண்டில் பேரழிவின் யுத்தத்தின் போதும் காயமடைந்தேன். கடும் காயம் காரணத்தால் ICRC கப்பல் மூலம் புல்மோட்டைக்கு வந்தேன். எனது பழைய காயங்கள் 2009இல் ஏற்பட்ட காயங்கள் காரணமாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பூசா முகாமில் 1 வருடம் 6 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டேன். எனது காயங்களின் (உடலின் முதுகுப்பகுதி) தாக்கத்தினால் எனது சிறுநீரகம் செயலிழந்து போனது. தடுப்புமுகாமில் எந்தவித மருத்துவமும் இன்றி இருந்தமையால் 2011ஆம் ஆண்டு 9ஆம் மாதமளவில் எனது இரு சிறுநீரகமும் முற்றாக செயலிழந்தநிலையில் மிகவும் கவலைக்கிடமான மோசமானநிலையில் சட்டத்தரணி(தம்பு) அவர்களின் பிரயாசையினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர-சிகிக்சைப் பிரிவில் கை, கால்களுக்கு விலங்கு பூட்டப்பட்ட நிலையில் பொலிஸ்காவலில் அனுமதிக்கப்பட்டேன். பின்னர் எனது மோசமான நிலையினாலும் சட்டத்தரணியின் உதவியினாலும் பிணையில் விடுதலை செய்யப்பட்டேன். இக்காலப்பகுதியில் எவ்வித உதவிகளுமின்றித் தவித்த எனக்கு நேசக்கரநிறுவனத்தினர் தமது நேசமான கரத்தை நீட்டி உதவி புரிந்தமையினாலேயே இன்றுவரை உயிர்வாழ்கின்றேன். இதற்கு என்னுடன் வெளிக்கடை சிறைச்சாலையில் இருந்த அரசியல் கைதிகளும் உறுதுணையாக இருந்து உதவிபுரிந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேசநிறுவனத்தினர் 2012-2013 ஆகிய காலப்பகுதிகள் வரை தமது உதவிகளை எமக்கு தந்து உதவினார்கள். உமக்கு மிகக் கட்டாயமாக ஒரு சிறுநீரகமாவது சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டிய தேவை இருப்பினும் அதற்கான நிதி பெருந்தொகையாகத் தேவைப்படுவதால் எந்தவித வசதிகளுமற்ற நிலையில் வாழும் எனக்கு சிறுநீரகமாற்றுச் சிகிச்சை என்பது இயலாத ஒன்றாகவே அமைந்துள்ளது. ஆயினும் இரத்தசுத்திகரிப்பு சிகிச்சை மூலம் உயிர்வாழக்கூடிய நிலைமை காணப்படுவதால் அதனையே நான் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை அச்சிகிச்சையை செய்வதன் மூலம் உயிர்வாழ்கின்றேன். எனது உடல்நிலை மிகவும் இயலாதநிலையாகவே உள்ளது. அத்துடன் இரத்தசுத்திகரிப்பு மாற்றுச்சிகிச்சையை மேற்கொள்வதற்கு எனது மாவட்டமான மன்னாரிலிருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு சென்றே மேற்கொள்ளவேண்டி உள்ளது. எனது மாவட்டத்தில் இச்சிகிச்சைக்குரிய எந்தவித வசதிகளும் இல்லாத காரணத்தினாலேயே எனது இயலாத உடல் நிலையிலும் 4 மணித்தியால பிரயாணத்தின் பின்னர் அவ்வைத்தியசாலைக்குச் சென்று எனக்கென குறிக்கப்பட்ட நேரம் வரும்வரை வைத்தியசாலையின் விறாந்தையில் பல அசௌரியங்களுக்கு மத்தியில் மணிக்கணக்காக காத்திருந்து எனது சிகிச்சை பெற்றுக்கொள்கிறேன். எனது உடலுக்குரிய சிகிச்சையான இரத்தச்-சுத்திகரிப்பு மாற்றுசிகிச்சையை அளிக்க (ஒருநாள் ஆவது) தவறினால் எனது உடல்நிலை மிகமோசமடைந்து விடும். இதற்கு நிதிநெருக்கடியும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. உரியவேளை வைத்தியசாலைக்கு செல்வதற்குரிய நிதி என்னிடம் இருப்பதில்லை. எனது நிலையினை மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் தெரிவித்து உதவிகோரிய போது அவர் வாழ்வோதய நிறுவனத்திடம் உதவி பெறுவதற்காக சிபாரிசு செய்து தந்துதவினார்.

இதன் நிமித்தம் வாழ்வோதயம் எனது போக்குவரத்துக்காக 4 மாதங்கள் மட்டுமே தமது உதவிகளை எனக்கு அளித்தார்கள். அதன் பின்னர் தொடர்ந்து உதவி புரிய முடியாததுள்ளதாக தெரிவித்தனர். எனது உயிர்வாழ்வு என்பது இரத்தமாற்று சிகிச்சையை தொடர்ந்து மேற்கொள்வதன் ஊடாகவே சாத்தியமானதொன்றாகும். இதனைத் தவிர்ப்பது என்பது எனது உயிரை இழப்பதுதான். நீண்டதூர பிரயாணம் செய்வதால் கால் வீங்கும், உடல்நோகும் உடலில் வேறுபல இயலாதநிலை ஏற்படும். அவ்வாறான நிலையிலும் கட்டாயமான ஒன்றாக இச்சிகிச்சை அமைவதால் இதனை எந்தவொரு காரணமும் காட்டி நான் தவிர்க்க விடமுடியாது. எனது உடலுக்குரிய சத்துக்கள் கிடைக்கப்பெறாமையால் வேறுபல நோய்களுக்கும் உட்படுகின்றேன். இதை தங்களுக்கு எழுதும் வேளையிலும் நான் கடுமையான காய்ச்சல், தலைவலி, இருமல், வாந்தி போன்ற நோய்களுக்கு உட்பட்டுள்ளேன். எனக்கு சத்தான உணவு தேவைப்படுவதால் இதற்காக மன்னார் ஆயர் அவர்கள் எனது உணவிற்காக மாதம் மாதம் 5000 ரூபாவை தந்துதவுகின்றார். இந்நிதியினையே தற்போதைய நிதிநெருக்கடியின் போது எனது சிகிச்சைக்கு பயன்படுத்துகின்றேன். இதுதவிர பிணையில் விடுதலை செய்யப்பட்டதால் எனக்கான வழக்குத்தவணைக்கு (மாதாமாதம்) நீதிமன்றத்திற்குச் சென்றே ஆகவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் நான் ஆளாகியுள்ளேன். கட்டாயமான எனது இச்சிகிச்சைக்கு ஒரு தடவை செல்வதற்கு 2000 ரூபாவரை தேவைப்படுகிறது. ஒருமாதம் 9 தடவைகள் செல்ல வேண்டியுள்ளதால் உனது இப்பரிதாபகரமான நிலையினைக் கருத்தில் கொண்டு சிகிச்சைக்கான நிதிஉதவியினை புலம்பெயர்ந்து வாழும் சமூகத்தினரிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றேன். எனது நிலையறிந்து உதவி புரிவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தங்களின் உதவியை எதிர்பார்த்து நிற்கும்,

இப்படிக்கு,
இ.ஜெகதீஸ்வரன்

INSEIN
INSEIN NEWS LETTER, INSEIN RELAX FUND
(பார்வை, Gift Aid) இணைந்து
தாயக உறவுகளுக்கான
இன்னிசை மாலை 2013
மாபெரும் இசை நிகழ்வும்
நடன விருந்தும்

இந்நிகழ்ச்சியில் சிறப்பாக திரு மயூரன் விவேகானந்தன் மற்றும் குழுவினர் வழங்கும் இனிய இசை நிகழ்வும்,

CALL US
0790 8437 921

Venue
Winston Churchill Hall
POSTPONED
Date & Time
07/04/2013 from 05.30pm to 10.30pm
Tickets : VIP £25 - Single £10

கருணை நிதிக்கான வேண்டுகோள் - கருணையுள்ளத்துடன்
தாயகத்தில் உடன் பிறப்புக்களுக்கு ஆதரவு வழங்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.
INSEIN RELAX FUND
(0044)7908437921 அல்லது
(004420)8561 6324
Unit 6 610 Uxbridge Road,
Hayes Middlesex. UB4 0RY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்தியாவின் நேரடித் தலையீடு

## இந்தியாவின் இராஜதந்திர முயற்சியில் ஏற்பட்ட தோல்வி

பங்குனி 15, 2013 இதழின் தொடர்ச்சி . . .

இதனைப் பயன்படுத்தியே இந்திய இராணுவத்திற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தினை நடாத்தியிருந்தனர்.

1989-1994 வரையிலான காலப் பகுதியில் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு ஆர்.பிரேமதாஸா ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார். தீவிர இந்திய எதிர்ப்பாளராக விளங்கிய இவரையும் அன்ரன் பாலசிங்கத்தினையும் பயன்படுத்தி (இவர் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் முன்னர் கடமையாற்றினவராவார்) இந்திய இராணுவத்தினை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்குத் தேசநாடுகள் மேற்கொண்டிருந்தன. இதற்கிணங்க இந்திய அமைதிகாக்கும் படைகளை இலங்கையில் இருந்து வெளியேற்றும்படி இந்திய அரசாங்கத்தைக் ஆர். பிரேமதாஸா கேட்டுக் கொண்டார். இது இந்தியாவிற்கு வெறுப்பினை உண்டு பண்ணியதோடு இலங்கை-இந்திய உறவில் பாதிப்பினையும் ஏற்படுத்தி இருந்தது. 1990ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியதனைத் தொடர்ந்து விஸ்வனாத் பிரதாப்சிங் தலைமையில் தேசிய முன்னணி அரசாங்கத்தினை அமைத்துக் கொண்டது. இவர் இந்திய இராணுவத்தினை இலங்கையில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டதோடு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதனையும் தவிர்த்துக் கொண்டார்.

## இலங்கையுடனான இந்தியாவின் தந்திரோபாய உறவு

1990ஆம் ஆண்டு இந்தியாவில் காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து தேசிய முன்னணியின் சார்பில் விஸ்வனாத் பிரதாப் சிங் தலைமையிலான அரசாங்கம் பதவியிலமர்த்தப்பட்டது. அவரின் ஆட்சிக் காலத்தில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் சுமூக நிலைக்கு வரத் தொடங்கின. ஏனெனில் அவர் இந்திய இராணுவத்தினை இலங்கையிலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டதோடு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதனையும் தவிர்த்துக் கொண்டார்.



1991ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இந்தியா, இலங்கையின் இனப்பிரச்சனையில் தலையிடுவதனை முற்றாக விலக்கிக் கொண்டது. 1991ஆம் ஆண்டு காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. மேலும் தமிழ் நாட்டில் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

ராஜீவ்காந்தி படுகொலைக்குக் காரணமாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடுமையான போக்கினை தமிழக அரசும் இந்திய அரசும் கடைப்பிடிக்கலாயிற்று. ராஜீவ்காந்தியின் கொலை இலங்கை-இந்திய உறவை மீண்டும் பாதித்தது. 1991ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடக்கவிருந்த சார்க் உச்சிமகாநாடும் இந்தியா பங்கேற்காத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. 1992ஆம் ஆண்டு இந்திய உயர்நீதி மன்றம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருக்கு எதிராக பிடிவிராந்து பிறப்பித்தது. அதேபோல புலிகளின் நடமாட்டத்தையும் இந்தியா கட்டுப்படுத்தியது. 1993ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கொலை செய்யப்பட்டு டி.பி.விஜயதுங்க பதவியேற்ற போது இலங்கை-இந்திய உறவில் ஒரு சுமுகமான நிலை பேணப்பட்டது. இலங்கையிலிருந்து இந்திய அமைதிகாக்கும் படை வெளியேற்றப்பட்டதன் பின்னர் மீண்டும் இனப்பிரச்சினையில் இந்தியாவின் வகிபாகத்தினை இலங்கையின் அனேக அரசியல் குழுக்களும் தலைவர்களும் விரும்பியிருந்தார்கள். ஆனால் எவ்வகையில் இந்தியா தனது வகிபாகத்தினை கொண்டிருக்க வேண்டும் என்பதில் இவர்களுக்கு இடையில் ஒற்றுமை இருக்கவில்லை. இந்தியா என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக வேறுபட்ட முரண்பாடான கருத்துக்கள் இவர்களுக்கிடையில் காணப்பட்டன. பெரும் மனித அவலத்தினை ஏற்படுத்திய் சுனாமி பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பேச்சு வார்த்தை இலங்கையில் சமாதானமும் இல்லை, யுத்தமும் இல்லை என்ற நிலையினை உருவாக்கியிருப்பதாக சர்வதேச அரங்கிலும் இந்தியாவிலும் கருதப்பட்டிருந்தது.

**ஆக்கம் : Dr. மோகன்**

அடுத்த இதழில் தொடரும்

## இன்றைய எம் அரசியல் நிலை
தொடர்ச்சி...

1] இனவழிப்பு தொடர்பாக சுயாதீன சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2] தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்.

3] தமிழர் தாயகத்தின் மீது சிறிலங்கா அரசால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை தடுக்கும் முகமாக பாதுகாப்புப் பொறி முறையை ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்.

4] சிறிலங்கா அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணமல் போன போராளிகள் மற்றும் பொதுமக்களின் விபரங்களை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும், கால வரையறையின்றி தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5] தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு, பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள், அரச படைகளின் அத்துமீறிய காணிச் சுவீகரிப்புக்கள், வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவது போன்ற செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படுவதோடு, அங்கு நிலைகொண்டிருக்கும் அரச படைகளும் அகற்றப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றிக்கு இந்திய வல்லரசு தனது முழுமையான ஆதரவினை வழங்கி தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை கண்டு, தமிழர்கள் தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன், சுதந்திரமாக வாழ, வழி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்" என்ற கோரிக்கைகளை முன்வைத்தும், ஈழத் தமிழர்களின் சுதந்திரத்திற்காக சமகாலத்தில் தாய்த் தமிழக மாணவர் சமூகம் முன்னெடுக்கும் தொடர் உண்ணாநிலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், பிரித்தானிய தமிழ் இளையோர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்"

லண்டன் புறநகர்ப் பகுதியில் இருந்து பல மக்களும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதி நிதிகள் பலரும், பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த பிரதி நிதிகளும் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

**குறிப்பு:**
வெள்ளி மாலை *22/03/2013: 04.35* மணியளவில் எமது வேண்டுகோள்கள் கொண்ட அறிக்கையை இந்திய தூதுவரிடம் கையளித்து தங்களுடைய தண்ணீர் உட்பட எதுவும் அருந்தாமல் மேற்கொண்ட உண்ணா விரதத்தை குளிர்பானம் அருந்தி நிறைவு செய்தார்கள்.

*உணர்வுள்ளவர்களுக்கு:*
புலம்பெயர் மக்களில் பலர் தாம் எப்படி இங்கு வந்தோம் என்பதை மறந்துவிட்டார்கள் என்பது வேதனைக்குரிய விடயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வாடகை நிலுவை முற்றும் வீட்டை திருப்பி பெறல்

பங்குனி 15, 2013 இதழின் தொடர்ச்சி . . .

**கேள்வி:** நான் ஒரு வாடகைக்கு வீட்டில் வசித்து வருகிறேன் ஆனால் வீட்டு உரிமையாளர் வீட்டை பழுது பார்க்க மறுக்கிறார். என்னுடைய சட்ட நிலைப்பாடு என்ன? நான் வாடகை செலுத்துவதை நிறுத்த முடியுமா?

**பதில்:** உரிமையாளர் பழுது வேலையை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது. ஆனால் நீங்கள் வாடகை செலுத்துவதை நிறுத்துவது சரியான வழிமுறையாக இருக்காது. வீட்டு உரிமையாளர் பிரிவு 8இன் கீழ் உங்களிடம் இருந்து வீட்டை திருப்பி பெறுவதற்காக நீதிமன்ற நடவடிக்கையில் இறங்கலாம். எனினும் உங்கள் வீட்டு உரிமையாளருக்கு எதிரான சட்ட நடவடிக்கைக்கு நீங்கள் உங்கள் வீட்டை பழுது பார்க்க தவறியமைக்காக உங்கள் சார்பாக (Defence) நீதி மன்றத்தில் பதிவு செய்து பழுது பார்க்க தவறியமைக்கான நஷ்டவீட்டை கோர முடியும். நீங்கள் உங்கள் புகாரில் (Counter-Claim) வெற்றி பெற்றால் நீங்கள் செலுத்தாத வாடகைப் பணத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம். இருந்தபோதும் நான் கருதுகிறேன் நீங்கள் ஒரு முன்நடவடிக்கைக் (Pre-Action) கடிதத்தை வீட்டு உரிமையாளருக்கு அனுப்பி பழுது சம்மந்தமாக வல்லுனரை நியமிப்பது சம்மந்தமாக ஆராய்வதை பற்றி அறிந்து கொள்ளலாம். வீட்டு உரிமையாளர் இதற்கு மறுப்பு தெரிவித்தால் அல்லது பதில் தர மறுத்தால் நீங்கள் நீதி மன்றம் ஊடாக சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கலாம். தோற்பவர் வெற்றி பெறுபவரின் சட்ட செலவை கட்டவேண்டியது பொதுவான சட்டம்.

**கேள்வி:** நான் ஒரு வீட்டு உரிமையாளர். எனது வாடகைத்தாரர் நான் வீட்டைப் பழுது பார்கவில்லை என்று கூறி வாடகை தர மறுக்கிறார். நான் வீட்டை ஆய்விட்ட பொழுது வாடகைத்தாரர் வேண்டும் என்றே வீட்டை சேதப்படுத்தி இருந்ததை அறியக்கூடியதாக இருத்தது. நான் வீட்டை பழுது பார்க்க வேண்டிய கடமைப்பாடு எனக்கு உள்ளதா?

**பதில்:** பிரிவு 11இன் கீழ் ஒரு வீட்டு உரிமையாளர் வாடகைக்கு கொடுத்த வீட்டை பழுது பார்க்க வேண்டிய கடமைப்பாடு உள்ளது. இதை நீங்கள் நியாயமான கால அளவுக்குள் செய்து கொடுக்க வேண்டும். ஆயினும் இந்த கடமைப்பாடு வாடகைத்தாரர் உங்களுக்கு பழுதை பற்றி அறிவிக்கும் பொழுதுதான் ஏற்படுகிறது. வாடகைத்தாரர் வேண்டும் என்றே வீட்டை சேதப்படுத்தி இருந்தால் உங்களுக்கு சட்டபடி கடமைப்பாடு இல்லை. எனினும் உங்கள் வாடகைத்தாரர் நீங்கள் வாடகைக்கு விட்டை ஒரு நல்ல வாடகைத்தாரர் போல் வைத்திருப்பது சட்டப்படி அவசியம். வீட்டிற்கு ஏற்பட்ட சேதத்திற்குகான காரணத்தை வாடகைக்காரரால் விளக்க முடியவில்லை எனின் ஒரு நியாயமாக சிந்திக்க கூடிய வீட்டு உரிமையாளர் இப்படிப்பட்ட சேதம் வீட்டு வாடகை தராமல் அல்லது அவரது விருந்திரனால் ஏற்டுதப்பட்டது என்ற முடிவுக்கு வர முடியும். இந்த விடயம் இவ்வாறாக இருந்த போதிலும் முதலில் நீங்கள் ஏற்பட்ட சேதத்தை நீங்களே பழுதுபார்ப்பது நன்று. பின்னர் அவ்வாறு ஏற்பட்ட செலவீனத்தை வாடகைதாரரிடம் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான சூழலில் சேதத்தை பழுதுபார்க்க செலவிட்ட பணத்தை வாடகை நிலுவையாக நீங்கள் கருதமுடியாது. ஆதலால் நீங்கள் பிரிவு 8இன் கீழ் வாடகை நிலுவையாக இதை உட்படுத்த முடியாது. இதை பெறுவதற்கு நீங்கள் தனியாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை வரலாம்.

**ஆக்கம் : சட்டத்தரணி திரு. ஜெயராஜன் விஸ்வலிங்கம்**
**- LLB(Hons). MA, PGA**

அடுத்த இதழில் தொடரும்

*Disclaimer: No responsibility for any loss or consequential loss occasioned to any person as a result of this documentation can be accepted by Jeyarajan Visvalingam. The information should not be interpreted as being advice on specific issue. For your specific dispute or legal issue consult a qualified solicitor who is specializing in Residential Landlord and Tenant Law.*

TRT தமிழ் ஒலி
உலக தமிழர்களை ஒன்றிணைக்கும் வானொலி
www.tamilolli.com
செயற்கைக்கோள் ஒலிபரப்பு,
EUTELSAT HOT BIRD 13°
Frequency N° 12245 H (Horizontal)

ஐரோப்பாவின் முதல் 24 மணிநேர தமிழ் வானொலி
ரீஆர்ரி தமிழ் ஒலி

தேசம் கடந்தாலும் வீசும் காற்றாக உங்கள் வாசல் தேடிவரும் வானொலி
ரீஆர்ரி தமிழ் ஒலி

உங்கள் TRT தமிழ் ஒலியில் வணக்கம் தமிழ்ஒலி காலைப் பூந்தென்றல் வானெலிக் குறுக்கெழுத்துப்-போட்டி இசையும் கதையும் வியாழன் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசியல் சமூகமேடை (துல்லியமான பக்கசார்பற்ற அரசியல் ஆய்வு) வானிலை அரங்கம் பாடுவோர் பாடலாம் உதவுவோமா? தாயக உறவுகளைக் கைவிடமாட்டோம் சமூகப்பணி நிகழ்ச்சி பாட்டும் பதமும் சமைப்போம் ருசிப்போம் இராக்கோழி இன்னும் பல நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டு மகிழலாம் .

FACE

HARROW TUTORIAL COLLEGE
WWW.HARROWTUTORIALCOLLEGE.CO.UK ☎ 020 8423 6227




11+ Preparation
Intensive coaching for 11+ Entrance Examination
100% Success guaranteed, Proven Success in the past.
Free initial assessment!

Full-time Private Education
for Sixth form & adult Students
- Mathematics
- Further mathematics
- ICT
- Economics
- Chemistry
- Physics
- Biology

Value added, at least by one grade!
Focused on UCAS/University offers!
CRB checked, Well qualified teachers
www.harrowtutorialcollege.co.uk

HARROW TUTORIAL COLLEGE
www.harrowtutorialcollege.co.uk
Tel: 020 8423 6227 ◆ Mob: 079 5731 7668
308 Eastcote Lane, South Harrow, HA2 9AH

GCE AS & A2
- Mathematics
- Further mathematics
- ICT
- Chemistry
- Physics
- Biology
- Economics

Full-Time Intensive Course for gap-year and re-sit students
Weekend & Evening tuition classes for Full-time school students

GCSE
- Mathematics
- Science
- English
- ICT

Above subjects for KS1, KS2 & KS3

Intensive course (1 Yr) for gap year or resit students
- Private exam entries for GCSE and Advanced Level
- Go through many past exam - style questions
- Cover the whole syllabus on time

CRB checked, Well qualified teachers
www.harrowtutorialcollege.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையின் முதிர்ச்சி பெற்ற பாதை

பங்குனி 15, 2013 இதழின் தொடர்ச்சி . . .

என்ற வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இத்தீர்மானமே 1977இல் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைக்- கப்பட்டு அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று கூட்டணி பெரு வெற்றியீட்டியது.

வட்டுக் கோட்டைப் பிரகடணம் 1977இல் இடம் பெற்ற தேர்தலின் மூலம் பெற்ற வெற்றியை மக்கள் ஆணையாகக் கொண்டு முதற் கட்டமாக தமிழ் ஈழத் தேசிய சபையை (National Assembly Of Tamil Eeleam) கூட்டி ஒரு தேசிய இனம் தனது சுயநிரணய உரிமையை பயன்படுத்தி தமது அரசியத் தலைவிதியை நிரணயிக்கின்ற உரிமையைப் பிரயேகித்து. தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்குக் கிழக்கை உத்தியோக பூர்வமாக தன்னிச்சையாக தமிழீழ சுதந்திர நாடாகப் பிரகடனத்தைச் செய்வதன் மூலம் பிரகடனப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அக்காலப்பகுதியில் இவ்வாறான தன்னிச்சையான சுதந்திரப் பிரகடனமோ அல்லது பிரிந்து செல்கின்ற எண்ணமோ தமிழ்த் தலைவர்களிடம் எள்ளளவேனும் இருந்திருக்கவில்லை.

தந்தை செல்வாவின் இறப்பும் இதனால் கூட்டணியில் ஏற்பட்ட தலைமை மாற்றம் 1977இல் தேர்தலின் பின் தமிழீழத் தேசிய சபையைக் கூட்டுமாறு கேட்கப்பட்ட போதும் கூட்டணித் தலைவர்கள் மறுத்துவிட்டார்கள். அவ்வாறு கூட்டியிருந்தால் 1977களின் இறுதிப்பகுதியில் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா பதவிக்கு வந்து தன்னை இஸ்திரப்படுத்த முன்னர் தமிழீழத்தை சர்வதேச ஆதரவுடன் சட்டரீதியாக நிறுவதற்கான முயற்ச்சிகளை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் தமிழ் மக்களிடம் தான் விடுதலை உணர்வு மேலோங்கி இருந்ததே தவிர அரசியல்த் தலைவர்களிடம் மேடைப் பேச்சில் மாத்திரமே விடுதலை, சுயநிரணயம் என்ற வீராவேச வார்த்தைகள் வந்ததே தவிர உளமார்ந்த தமிழர் சுயநிரணய உரிமை. வடகிழக்கில் தமிழர் இறைமை என்பன தொடர்பாக அவர்கள் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. வெறும் எதிர்க் கட்சித் தலைவர் பதவி கிடைத்ததுவும் வட்டுக் கோட்டைத் தீர்மானம் காற்றில் பறந்து விட்டது என்றே சொல்லலாம்.

வட்டுக் கோட்டைத் தீர்மானம் ஜனநாயகத் தேர்தல் மூலம் மக்கள் ஆணையாகப் பெற்றதனால் இதனைப் பயன்படுத்தி தன்னிச்சையான சுதந்திரப் பிரகடணமோ, அல்லது ஐ.நா வரையோ சென்று தமிழர் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான ஒரு வாய்பினை அக்கால அரசியத் தலைவர்கள் கைநழுவ விட்டுவிட்டார்கள் என்று சொல்வதே பொருத்தமானது. ஆனால் இதன்பின் வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட தேசிய எழுச்சியும், தமிழர் சுய நிர்ணயத்தைப் பெறுவதற்கான ஆயுதப் போராட்டத்தின் வேகமான வளர்ச்சியும் தமிழ் மக்கிளிடையே மிகப்பெரும் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்திற்று.

1980களின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் வலுவடைந்து செல்ல ஈழத்தமிழர்கள் இராணுவக் கெடுபிடிகளிலிருந்து தப்பி மேற்கு ஐரோப்பிய நாடுகள் நோக்கிப் புலம் பெயரச் செய்தது. இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழ்க் கல்வி மான்களும், தமிழீழ விடுதலை விரும்பிகளும் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர் சமூக அமைப்புக்களை உருவாக்கி தமிழீழ விடுதலைக்கு இச்சமூக அமைப்புக்களுடாக ஆதரவை வழங்கினர்.


இக்கால கட்டத்தில்தான் முதன்முறையாக இடம்பெயர்ந்த தமிழீழ அரசு பற்றி புலம்பெயர் தமிழர்களினால் பேசப்பட்டது. 1980,ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் திகதி லண்டனில். தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அது என்னவெனில் "1982 தைப்பொங்கல் தினத்தன்று சுதந்திர தமிழீழம் உதயமாகும்." என முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டது. இதனடிப்படையில் லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கிருஷ்ணா வைகுந்தவாசன் 14/11/1981 லண்டன் பிரகடணத்தின் பூர்வாங்கத் திட்டத்தினை வெளியிட்டிருந்தார். "1982 தைப்பொங்கல் தினத்தன்று நாடுகடத்தப்பட்ட நிலையிலான ஒரு தற்காலிக தமிழீழ அரசை பிரகடணப் படுத்துவது அதன்பின் ஐ.நா மூலமும் அவ்அமைப்பின் கீழுள்ள சர்வதேச சட்ட நிறுவனங்கள் வாயிலாகவும் எமது பாரம்பரிய பிரதேசங்களுக்கு சட்ட ஆட்சியுரிமை வேண்டுவது." என்பது தான் அவ் வெளியீட்டின் சாராம்சமாகும்.

திரு. வைகுந்தவாசன் வெளியிட்ட இடம்பெயர்ந்த தற்காலிக தமிழீழ அரசுப் பிரகடணச் செய்தி அன்றைய நாளில் மிகப் பிரசித்தம் பெற்றிருந்தது. இதனை இந்திய நாளோடுகள், இலங்கை நாளோடுகள் தலைப்புச் செய்தியாக்கின. லண்டன் பி.பி.சி தமிழோசை தனது 12/01/1982 செவ்வாய்க்கிழமை இரவு தமது ஒலிபரப்பில் இடம்பெயர்ந்த தமிழீழ சுதந்திரப் பிரகடணம் பற்றி நீண்டதொரு ஆய்வையும், அதன் ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர் கிருஷ்ணா வைகுந்த வாசன் அவர்களைப் பற்றியும், அவர் 05/10/1978இல் ஐ.நா. சபைக்குள் புகுந்து தமிழீழ விடுதலைக்குரல் எழுப்பியது பற்றியும் வர்ணிக்கப்பட்டது.

**ஆக்கம்: தி.வன்னியன்**

அடுத்த இதழில் தொடரும்

**Krish Ratna & Co Solicitors - Southall**
**020 8574 6303**




- Residential & Commercial Conveyancing,
- Immigration Matters AND
- Family Matters

**61A, King Street, SOUTHALL, UB2 4DQ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கேள்வியும் உங்கள்பதிலும்

1] ஆதிவாசிகளை ____ என அழைப்பார்கள்
a) முனிவர் b) வேடர்
c) மனிதன்

2] இராமாயணத்தை எழுதியது ____
a) குலோத்துங்கன் b) கம்பன்
c) வால்முகி

3] கம்பனின் மகன் ____ ஆவார்
a) அம்பிகாபதி b) அமராபதி
c) சோழன்

4] கண்ணகி வாழ்ந்த நகரம் ____ ஆகும்
a) சென்னை b) மதுரை
c) திருச்சி

5] இலங்கை ஓர் ____ ஆகும்
a) நாடு b) நகரம்
c) தீவு

6] கர்ணனின் தாயாரின் பெயர் ____ ஆகும்
a) கோசலை b) குந்தி
c) ஜானகி

7] சூரியனுக்கு உரிய பூ ____ ஆகும்
a) தாமரை b) மல்லிகை
c) முல்லை

8] குவேனி ____ என்பவரை மணந்தார்
a) கஜபாகு b) சிங்கபாகு
c) விஜயன்

9] சிங்களவர் இலங்கையில் ____ ஆண்டுகளுக்கு முன்னர் குடியேறினார்கள்
a) 1400 b) 1700
c) 2700

10] புத்தமதம் ____ மதத்திலிருந்து உருவாகியது
a) இந்து b) கிஸ்த்தவ
c) முஸ்லிம்

11] கச்சதீவு இலங்கைக்கு ____ உள்ளது
a) மேற்கே b) வடக்கே
c) கிழக்கே

12] ஆயுதப்போர் கிட்டத்தட்ட ____ ஆண்டுகள் இலங்கையில் இடம்பெற்றது
a) 40 b) 30
c) 25

13] பூரணை நாட்களில் இரவு ____ இருக்கும்
a) இருட்டாக b) வெளிச்சமாக
c) மங்கலாக

14] சங்கமித்தை வெள்ளரசு மரத்தை ____ நாட்டினார்
a) அனுராதபுரத்தில் b) கண்டியில்
c) கந்தரோடையில்

15] இலங்கைக்கு சுதந்திரம் ____ ஆண்டுகளுக்கு முன் கிடைத்தது
a) 63 b) 65
c) 61

16] கோவலனின் மனைவியின் பெயர் ____ ஆகும்
a) மாதவி b) கண்ணகி
c) அருந்ததி

17] இராமர் ____ வருடங்கள் காட்டில் சிறை வாசம் இருந்தார்.
a) 12 b) 14
c) 16

18] நான்நிலம் என்பது ____ ஆகும்
a) நான்கு நிலம் b) நல்ல நிலம்
c) விளை நிலம்

19] பொய் மொழியாமல் ____ வாழ்ந்தவராவர்
a) அரிச்சுனன் b) அரிச்சந்திரன்
c) கண்ணன்

20] அண்ணாத்துரை தமிழ்நாட்டில் ____ ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தார்
a) 10 b) 8
c) 12

Score : 20

## பதிலை நீங்கள் எழுதவும்

Score : 20

1] இலங்கையில் கோத்தபாய ராஜபக்ஸ என்ன பதவி வகிக்கிறார்?

---------------------------

2] தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் (TULF) மூன்று தலைவர்களும் யாவர்?

---------------------------

3] கொழும்பு நகரத்தில் இருந்து யாழ்ப்பாண நகரம் எவ்வளவு தொலைவிலுள்ளது?

---------------------------

4] இலங்கையிலுள்ள நீண்ட நதியின் பெயர் என்ன?

---------------------------

5] திருவாசகத்தை இயற்றியவரின் பெயர் என்ன?

---------------------------

6] விடுதலைப் புலிகளின் முதல் கேணல் தர மாவீரன்?

---------------------------

7] விடுதலைப் புலிகளின் இதயபூமி 1 தாக்குதல் நடவடிக்கை மூலம் தகர்க்கப்பட்ட சிறீலங்கா இராணுவமுகம் எது?

---------------------------

8] சர்வதேச நாடு ஒன்றில் சுகவீனம் காரணமாக சாவினைத் தழுவிக் கொண்ட விடுதலைப்புலிகளின் தளபதி யார்?

---------------------------

9] விடுதலைப் புலிகளின் படையணிகளில் "எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்" என்ற கோசத்தினை தாங்கிய படையணி?

---------------------------

10] பேச்சுவார்த்தைக்கென இந்தியாவிலிருந்து அழைத்து வந்து முல்லைத்தீவு தேவிபுரம் என்ற இடத்தில் வைத்து இந்தியப் படைகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவர்?

---------------------------

இதில் 7, 8 எனும் பக்கங்களில் இருக்கும் கேள்விகளுக்கு பதிலை எமது முகவரிக்கு அனுப்பி பங்கு பெறுபவர்கள் பெறும் புள்ளிகள் வருடாந்த பரிசுப்போட்டிக்குள் உள்வாங்கப்படும்.

### பங்குனி 15, 2013 7ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

| | |
|---|---|
| 1] b | 11] a |
| 2] c | 12] c |
| 3] c | 13] c |
| 4] a | 14] b |
| 5] c | 15] c |
| 6] c | 16] a |
| 7] a | 17] c |
| 8] c | 18] a |
| 9] b | 19] c |
| 10] c | 20] c |

1] நல்லூர் மாவிட்டபுரம் செல்வச்சன்நிதி
2] ஜனவரி 05 2000
3] மாவிட்டபுரம்
4] சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி
5] கென்யா நீரூற்று 6] கிளிநொச்சி
7] காங்கேசன்துறை
8] பண்டிதர்
9] புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, காரைதீவு
10] சந்திரன்

### பங்குனி 15, 2013 2ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] 1869ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ஆம் திகதி
2] புத்தலிபாய் 3] கரம்ஷாட்
4] கஸ்தூர்பாய்
5] 1929ஆம் ஆண்டு மார்கழி 31ஆம் திகதி
6] பாரப்பண்ட
7] 1888ஆம் ஆண்டு இலண்டன் சட்டப்பல்கலைக்கழகக் கல்லூரியில்
8] தென்ஆபிரிக்காவில் உள்ள டாடா அப்துல்லா

முழுப்பெயர் : ______________________
தொலைத் தொடர்பு இல : ______________________
குறியீடு பதிவு (post code) : ______________________

*Please return to our address*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பு பரிசுப்போட்டி

## தமிழ் வாக்கியத்தை வாசித்து ஆங்கில மொழிக்கு மாற்றுக - Score : 18

1] இலங்கையில் பொதுத்தேர்தல் எப்பொழுது நடைபெறும்?

2] ஐக்கிய தேசியக்கட்சியின் நடவடிக்கைகள் வரவேற்க்கத்தக்கது

3] வடக்கும் கிழக்கும் இணைந்த ஓர் தமிழ் ஈழத்தை மக்கள் விரும்புகிறார்கள்

4] நாங்கள் தமிழ் பாடசாலைக்குச் சென்று தழிழ்மொழி கற்கின்றோம்

5] எனது அம்மா எனக்கு தமிழ் மொழி கற்றுத் தருவார்

6] அணிசேரா மகாநாடு இலங்கையில் 1976ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது

7] நானும் அம்மாவுடன் இலங்கை சென்று வந்தேன்

8] எங்களுடைய பங்களிப்பு ஈழமக்களுக்கு அவசியம்

9] விழாக்கள் நடாத்தப்படுவது கலாச்சாரத்தை வெளிப்படுத்த உதவும்

10] சிங்களவர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறினார்கள்

## ஆங்கில மொழியில் அமைந்திருக்கும் வசனங்களை தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் - Score : 18

1] The proposal may be attained by both parties.

2] The Tamils want to have the referendum for freedom

3] Japan and Ceylon have a good internal relationship

4] The mailman will bring me an appointment letter

5] I have few year Experience in this job

6] I like to be a qualified person

7] Most of the refugees in Europe have been recognised

8] UNO's 22 session has ended on March 22nd, 2013

9] The travel agent company is owned by Anton Francis

10] The council tax has to be paid at the beginning of the month

இதில் 7,8 எனும் பக்கங்களில் இருக்கும் கேள்விகளுக்கு பதிலை எமது முகவரிக்கு அனுப்பி பங்கு பெறுபவர்கள் பெறும் புள்ளிகள் வருடாந்த பரிசுப்போட்டிக்குள் உள்வாங்கப்படும்.

## பங்குனி 15, 2013 8ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] The Nallur Murugan Temple is very famous in Sri Lanka
2] The next session of united nation organization will start in September
3] The election for the new pope will take place in Vatican
4] Ceylon is an island which entirely covered by sea.
5] The biggest ocean is Pacific in world oceans
6] The non-alien conference was held in Sri Lanka in 1976.
7] The standardisation to the university entrance has been introduced in 1971.
8] Prof S. Vithyananthan had serviced as vice Chancellor for a long period in Jaffna university.
9] The Pameshwara college & Ramanathan college were established by Sir. Ponnampalam Ramanathan.
10] Mr. M. Sivasithamparam was the president for TULF. (Tamil United Liberation Front)

1] அனுகுமுறையின் பாதையை அடையாளம் காண்பது கடினம்.
2] கௌவில் உள்ள சமூக நிலையத்தில் நீங்கள் தேவையான ஆதரவைப் பெறலாம்.
3] எங்களுடைய ஜனாதிபதி ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் பறந்து செல்லவுள்ளார்.
4] முகாமைத்துவக் குழு ஊடகத்தை இடைநிறுத்தலாம்.
5] இங்கிலாந்தில் பனியுடன் கூடிய புயல்க்காற்று 50m/h வீசும்.
6] எல்லா இணைப்புக்களையும் இல்லாமல் செய்வதா என்பது இன்னமும் தெளிவாகவில்லை.
7] நாங்கள் முடிவு கிடைக்கும் வரை போராடுவோம்.
8] பொது ஊழியர்கள் பிரயோசனமான ஒற்றுமையை உருவாக்குவார்கள்.
9] பாலசந்திரன் எவ்வாறு இறந்தான் என்பது நான்கு வருடத்தின் பின்பு வெளியாகியுள்ளது.
10] இன்சயின் குழுவின் சந்தைப்படுத்தல் பகுதியில் வேலை வாய்ப்புக்கள் உண்டு.

## மகாத்மா காந்தியைப் பற்றிய கேள்விகள் - Score : 24

1] காந்தி எத்தனையாம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்குச் சென்றார்?

2] இந்தியாவின் விடுதலைக்கு வித்திட்டவர் யார்?

3] விஜயன் எத்தனையாம் ஆண்டு இலங்கைக்குத் துரத்தப்பட்டான்?

4] இஸ்லாமிய மதம் எப்போது இந்தியாவினுள் புகுந்தது?

5] இந்தியாவின் முதல் பிரதமர் யார்?

6] நேரு எத்தனையாம் ஆண்டு பதவி ஏற்றார்?

7] நேரு எத்தனையாம் ஆண்டு இறந்தார்?

8] இந்திரா காந்தி எத்தனையாம் ஆண்டு பதவி ஏற்றார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் - முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு புலம்பெயர் உறவுகளது பங்களிப்புடன் கற்றல் உபகரணம் வழங்கிய கூட்டமைப்பினர்- இன்சயின் குழுவினரின் ஆதரவில்: (INSEIN TEAM'S SUPPORT)

யுத்தத்தால் சேதமடைந்து தற்போது கல்விச் செயற்பாட்டை ஆரம்பித்துள்ள முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு 14/03/2013 அன்று இடம் பெற்றது. புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இப்பொருட்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வினோரோகநாதலிங்கம் கையளித்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர் திரு. கு.சிவசுப்பிரமணியம் தெரிவிக்கையில்: தற்போது ஐம்பத்தியிரண்டு மாணவர்களுடன் தற்காலிக கொட்டகையில் 01/10/2012 முதல் கல்வி நடவடிக்கையைத் தொடர்ந்துள்ளோம். எமக்கு மலசலகூடங்கள் இல்லை. இயற்கை உபாதையை வெளியேற்ற காட்டிற்கே செல்ல வேண்டியுள்ளது.

யுத்தத்தின் இறுதிச்சண்டை இடம்பெற்றிருந்த இப்பாடசாலைச் சுற்றாட்லில் மனித எச்சங்களும் வெடிக்காத வெடி பொருட்களும் வெற்று மருந்துக் குப்பிகளும். பாரிய பங்கர்களும் நிறைந்து காணப்படுகின்றன. எமது மைதானம் சிதைந்துள்ளது. கிணறும் முற்றாக தூர்ந்து போயுள்ளதால் குடிநீர் பெற அரைக்-கிலோமீற்றரிலுள்ள வீடொன்றிற்கே செல்ல வேண்டிய நிலையில் கற்பித்தலை மேற்கொள்கின்றோம். அவசரமாக புதிய கிணறும் பாடசாலைக்கட்டிடம் அலுவலக அறை மலசலகூடங்கள் மற்றும் இரண்டு ஏக்கர் மைதானம் முதலானவை நிர்மானிக்கவும் புனரமைக்கவும் வேண்டியுள்ளது. அயலிலுள்ள மக்களை 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புதுக்குடியிருப்பிலுள்ள "சிம்பிலி" என்கின்ற ஊரில் குடியேற்றி- யுள்ளனர். தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட 215 குடும்பங்களை இச்சுற்றாடலில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். எனவே பாடசாலையை கட்டித்தரவும் பி-றவசதிகளைப் பெறவும் வலயக் கல்விப் பணிமனையைக் கோரியுள்ளதாகவும் அதிபர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையின் தற்போதைய நிலை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிக்கையில் கடந்தகால யுத்தத்தால் வடமாகாணத்தில் இன்னமும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்காதுள்ளன. ஆனால் வன்னி மாவட்டத்தில் வலிந்து குடியேற்றப்பட்டுள்ள சிங்களப் பகுதி உள்ளிட்ட சிங்களப் பாடசாலை-களுக்கும் ஏனைய பாடசாலைகளின் நிர்மான புனரமைப்பிற்கு 400 மில்லியன் ரூபாய்கள் மாகாணக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலையின் தேவை சொற்பளவே. இப்பாடசாலையில் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள் கற்பதோடு காலை உணவிற்கே வழியில்லாமல் கற்க வருகின்றனர். வேறு இடங்களில் உள்ள வசதியான பாடசாலைக-ளின் அபிவிருத்திகள் அதிகரிக்கப்படுகின்றன. ஆனால் முல்லைத்தீவில் இறுதிக்கட்டப் போரால் மோசமாகப் பாதிப்படைந்த தமிழ் பாடசாலைகளின் புனரமைப்பு பாராமுகமாகவே விடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






இப்படிக்கு
-Insein தகவல் மையம்

# தாயின் மருத்துவ செலவிற்கு உதவி கோரும் ஐம்பது வருட கால தீர்ப்பில் சிறையிருக்கும் தனயன்.........!

**புலம் பெயர்ந்து வாழும் பலங்கொண்ட எமது அன்பான தமிழ் உறவுகளே!**

நல்லரட்னம் சிங்கராஜாவாகிய நான் எழுதிக்கொள்ளவது... எனது 19 வயதில் 1993 ஆண்டு கைது செய்யப்பட்டேன். 1995 ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பு ஐம்பது வருட கால தண்டனை. இருபது வருடங்களாக சிறையில் இருக்கின்றேன். தண்டனையின் துயரம் தாளாது எனது அப்பா மாரடைபடபால் மாண்டு போனார். இறுதி நிகழ்விற்கு அனுமதி கிடைக்க வில்லை. அச்சோகத்திலிருந்து மீளுவதற்குள் எனது தம்பியும் மாவீரரானார் என அறிய கிடைத்தது. அடுத்ததாக எனது சகோதரியின் கணவரும் இராணுவத்தின் செல்லடிக்கு இரையானார்.

அடுக்கடுக்கான சோகங்களை தாங்க முடியாத எனது தாயார் நோயுற்று படுக்கையில் வீழ்ந்து விட்டார். தொய்வு நோய் தொற்றி தொடரான துன்பத்தினை அனுபவித்து வருகின்றார். மிகவும் வறுமை பட்ட சூழ் நிலையில் வாழும் எமது குடும்பம் கிடைக்கும் கூலி வேலையினை செய்து எனது தாயாரின் உணவுத்தேவையினை பூர்த்தி செய்கிறார்கள். ஆனால் அவரின் மருத்துவ செலவிற்காக அவர்களால் உதவ முடியவில்லை. அவரின் மருத்துவ செலவிற்காக ஒரு மாதத்திற்கு 5000.00 ரூபா செலவாகிறது. இல்லாதவர்கள் இருப்பு எதுவுமே அற்றவர்கள் என்ன செய்ய முடியும் ? அறிந்தவர் தெரிந்தவர் மூலம் கிடைத்த சிறு உதவிகளை கொண்டு இந்நாள் வரை சமாளித்து வந்தோம். இனியும் உதவி கோர முடியாத சூழலிலேயே உங்களின் தயவன்பான உதவியினை நாடி நிற்கிறேன்.

ஐ.நா சபை வரை நியாயம் வேண்டி சென்ற எனது தண்டனைக்கான நியாயத்தினை இலங்கை அரசின் நீதித்துவம் மறுதளித்து விட்டது. இப்போதெல்லாம் என் விடுதலை பற்றியோ என் வாழ்வின் எஞ்சப்போகும் நாட்களை பற்றியோ எவ்வித கவலையும் படுவதில்லை. பெற்று வளர்த்த தாய் இத்தனை துன்பம் படும் வேளையில் நான் சிறையில் அடைப்பட்டு கிடக்கிறேன். வெளியில் இருந்திருந்தாலாவது கூலி வேலை செய்தாவது காப்பாற்றுவேன் என்ற எண்ணங்கள் மேலோங்கினாலும் அந்த நாள் என் வாழ்வில் வரும் என்ற நம்பிக்கைகள் இப்போது தளர்ந்து விட்டன. இருக்கும் காலத்திலாவது எனது தாயார் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற நப்பாசையில் உங்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறேன்..... மாதாந்தம் மருத்துவ உதவிக்கான நிதியினை தந்துதவினால் நான் சிறிது நிம்மதியுடன் சிறை வாழ்வினை கழிப்பேன் என எண்ணுகிறேன்.

உங்கள் உதவியினை நாடும் உடன் பிறவா உறவான ந.சிங்கராஜா
எனது உதவிக்கான தொடர்பு:
வி.இராஜன் - தொலைபேசி 02084249297/ 07435720845
மின் அஞ்சல் - rajanv77@hotmail.com

## நற்செய்தி!..

தாயக உறவுகளுக்கு நிதி ரீதியாக உதவ விரும்புவர்கள் எந்தவித சேவைக்கட்டணமும் இல்லாமல் உங்களஎண்ணங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பூர்த்தி செய்லாம்.




**INSEIN (LONDON)**
Unit 6, 610, Uxbridge Road,
Hayes, Middlesex, UB4 0RY.
(020)8561 6324 / 07908437921
Mon:Sat-10.30am to 12.30pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் - பக்தி

பங்குனி 15, 2013 இதழின் தொடர்ச்சி . . .

யுகங்கள் நான்கு! கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன கிருதயுகத்தில் ஞானத்தினால் முக்தி, திரேதாயுகத்தில் தானத்தினால் முக்தி, துவாபர யுகத்தில் யாகத்தினால் முக்தி, கலியுகத்தில் யாகத்தினால் முக்தி. பக்தி என்பது வடமொழி: அன்பு என்பது தென்மொழி. பக்தி என்ற வலையில் தான் கடவுள் அகப்படுவார்.

"பக்தி வலையில் படுவோன் காண்க" –திருவாசகம்
"அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே அன்பெனுங் குடில்புகும் அரசே! அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே அன்பெனுங் கரத்தமர் அமுதே. அன்பெனுங் கடத்துள் அடங்கிடுங் கடலே அன்பெனும் உயிரஒளி அறிவே அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே அன்புரு வாம்பர சிவமே"

அன்பு 'இல்லாத ஒருவன் மனிதன் ஆகமாட்டான். திருவள்ளுவர் அன்பில்லாத ஒருவனைப் பிணம் என்று கூடச் சொல்ல விரும்பவில்லை. பிணம் பலருக்குசப் பணந்தரச் செய்து உதவுகின்றது. ஆதலால் அன்பில்லாத ஒருவனை என்புதோல் போர்த்த உடம்பு என்றார்.

"அன்பின் வழிய துயிர்நிலை அ திலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" இனி பக்திச்செல்வம், குலம், இடம் ஆகிய இத்தகைய தடை இல்லை.

தண்ணீர்ப்பந்தல் வைக்க வேண்டுமானால் செல்வம் வேண்டும். செல்வம் இன்றித் தொடங்கினால் இரண்டு நாள் கூட அத்தருமத்தை நடத்த முடியாது. பக்தி, பரம தரித்திரர்களும் புரியலாம். மிக்க வறியவராகிய குசேலமுனிவர் பக்தி செய்து திருவருள் பெற்றார்.

தண்ணீர்ப் பந்தல் அமைக்கக் காலம் வேண்டும். ஐப்பசிமாதம் அடைமழை பொழியும்போது "ஆற்றோரம் தண்ணீர் பந்தல் வைத்து, ஐயா! நல்ல மோர் பருகுங்கள்" என்றால் அவர் பருகுவார்?

"அடமூடனே! உனக்கு அறிவில்லையா? இந்த மழையிலா மோர்குடிப்பது?" என்பர். ஆதலால் தண்ணீர்ப் பந்தல் கோடைகாலத்தில் வைக்கவேண்டும். எனவே தண்ணீர்ப்பந்தல் வைக்க காலம் பார்க்க வேண்டும். பக்தி செய்வதற்குக் காலம் தடைபுரியாது. மழைக்காலம், வெயிற்காலம், பனிக்காலம், இரவு, பகல், காலை, மாலை எந்நேரத்திலும் பக்தி செய்யலாம்.

"இருக்கினும் நிற்கும் போதும் பொருக்கென நடக்கும் போதும் பொருந்தியுண் துயக்கும் போதும் முருக்கிதழ் கனிவா யாரை முயங்கிநெஞ் அழியும் போதும் திருக்களா வுடைய நம்பா சிந்தையுன் பால தாமே"

மேலும் தண்ணீரப் பந்தல் இடம் பார்த்து வைக்க வேண்டும். ஒரு குன்றின் மீது வைத்துவிட்டுச் சாலையில் ஒருவன் நின்று வெயிலில் நடந்து களைத்துப் போன ஒருவனைப் பார்த்து "ஐயா! நீர் மோர் பானகம் வேண்டுமா?" என்றான்.

பிரயாணி "ஆம், நாவறட்சி பொறுக்கமுடியவில்லை. நீர், மோர், பானகம் எங்கே?" கொஞ்சம் கொடுத்து என் உயிரைக் காத்து உதவும் என்றான். "ஐயா! அதோ அந்த மலைமீது வைத்துள்ளேன் வாரும்" என்றான். "அடபாவி பத்துபேர் நடக்கின்ற சாலையில் வைக்கக்கூடாதா? "ஐயோ! அந்தமலைமீது ஏறுவதற்குள் என்உயிர பிரிந்து விடுமே நீரமோரே வேண்டாம்" என்பார்.

ஆனபடியால் தண்ணீர்ப் பந்தல் இடம் நோக்கி அமைக்கவேண்டும். இங்கே பக்திக்கு அந்தத் தடையும் இல்லை. எந்த இடத்திலும் பக்தி செய்யலாம். பள்ளம், மேடு, காடு, வீடு எங்கிருந்தும் பக்தி செய்யலாம். பக்தியில்லாமல் வெறும் துறவு பூண்டு காட்டிலிருப்பினும் காற்றைப் பருகினும் கந்தையுடுத்தி ஓட்டையெடுப்பினும் உய்வு பெறமாட்டார்கள். பக்தியுடையவர்கள் தமது தரும பத்தினியுடன் வீட்டிலிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டை அடைவார்கள். பட்டினத்துச் சுவாமிகள் கூறுகின்றார்.

"காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தை சுற்றி ஓடே எடுத்தென்ன? உள்ளன்பிலாதார் ஓங்குவிண்ணோர் நாடே இடைமறு தீசர்க்கு மெய்யன்பர் நாரியல்பால் வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே"

பக்திக்குக் குலம் முதலிய தடையும் இல்லை. உயர்குலத்தினர் தான் பக்தி செய்யவேண்டும். இழிகுலத்தார் பக்தி செய்தல் கூடாது. என்ற நியதி இல்லை. இறைவனிடம் பக்தி இல்லாதவன் பெருங்குலத்தில் பிறந்து பெருஞ் செல்வராகி எனக்கு மண்ணுலக வாழ்வு விண்ணுலரசுந் தந்துதவி புரியினும் அவரை நான் ஒரு பொருளாக மதிக்கமாட்டேன். சிவபெருமானுடைய திருவடியில் அன்பு வைத்தவர் அங்கம் அழுகிய தொழுநோயராயினும் அவர்கள் எமது வழிபடு கடவுளர் ஆவர் என்கின்றனர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

"சங்கநிதி, பதுமநிதி இரண்டுந்தந்து தரணியொடு வானாளத் தருவரேனும் மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம் மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில் அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே"

அன்பைப்பெற்றுவிட்டால் அதுவே எல்லாவற்றையும் பெற்றுவிட்டதாகும் அன்புடையார் என்பையும் பிறர்க்கு வழங்குவார். அன்பு என்ற பக்தி சித்தியையும், முக்தியையும் தரும். பரமனும் பக்தருக்கு வாய்த்தவராகத் திகழ்ந்தார்.

"பக்தி சித்தி காட்டி அத்தர் சித்தமீட்ட புத்தருக்கு வாய்த்த பெருமானே"– திருப்புகழ். பக்தியினால் விளைந்த விளைவுகளைப் பற்றி ஆதிசங்கரா-வியந்து கூறுகின்றார்.

1] மார்க்கத்தில் தேய்ந்த பழஞ்செருப்பு சிவபெருமானுடைய புருவநடுவில் சென்றது.
2] கொப்பிளித்து உமிழ்ந்த நீர் அப்பரமனுக்குச் சிறந்த அபிஷேகமாகியது.
3] சிறிது கடித்து எச்சில் செய்த புலால் துண்டு உயர்ந்த உணவாக ஆயிற்று.
4] வேடன் பக்த சிரோன்மணியாக ஆனான். ஆகவே பக்தி எதைத்தான் செய்யாது? எல்லா உயர்வையும் தரும்.

"மார்க்காவர்த்தித பாதுகா பசுபதே ரங்கஸ்ய கூர்ச்சாயதே கண்டுஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபிஷேகாயத கிஞ்சித் பகழித மாம்ஸ சேஷ கபளம் நவ்யாப காறாயதே பக்தி கிம் நகரோத்யவேகா வந்சரோ பக்தாவதம் காயதே"

சிவநந்தலகரி பக்தியுடன் பகவானுடைய திருநாமங்களை ஒருமுறை கூறினும் வினைகள் வெந்து நீறாகும். சுகல நலன்களும் உண்டாகும். நாரதர் ஒரு சமயம் வைகுண்டம் சென்றார். விஷ்ணு மூர்த்தியை வணங்கினார். சுவாமி உலகிலே உள்ள மனிதர்கட்கு உன்திருவடியுடைய எளிய வழியாது? என்று வினவினார்.

**ஆக்கம் : சந்துரு ஐயா**

அடுத்த இதழில் தொடரும்

உங்கள் எடையைக் குறைக்க / அதிகரிக்க கட்டுப்படுத்த!!! . . .

உங்கள் விருப்பமான உணவு எதையும் தவிர்க்காமல் எடையைக் கட்டுப்படுத்தி உடல் ஆரோக்கியத்தை உணருங்கள்.




விபரங்களுக்கு - சந்திரகுமார்
079 0323 4730



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஓலைகள்
# TAMIL PAGES

*Is celebrating* **20** *years of service*

தமிழர்களுக்கோர்
தரமான இலவச
சமூக வர்த்தக
தகவல் ஏடு

எமது 20 வது புதிய
பதிப்பில் உங்கள்
விளம்பரங்கள்
விவரங்கள் இடம் பெற
உடனே தொடர்பு
கொள்ளுங்கள்

**Act now !**
**Before its too late**

**You can advertise from £25 onwards**

தொடர்புகளுக்கு

www.tamilpages.com

0771 800 3838 | 0798 642 9848 | 07703 190 768

editor@tamilpages.com

52 Kingsley Road, Wimbledon
London SW19 8HF


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org